அன்பான குடும்பத்தவர்களுக்கு,

ஒவ்வொரு மாணவரும் முக்கியமானவர் (Every Student Counts) என்ற கருத்துக்கணிப்பில் யோர்க் பிராந்திய கல்விச் சபை மாணவர்கள் ஏப்ரல் 24 முதல் மே 12, 2023 வரை ஈடுபடவுள்ளார்கள்.

**கருத்துக்கணிப்பை நிர்வகித்தல்**

- பாலர்வகுப்பு முதல் தரம் 3 வரையுள்ள மாணவர்கள் அந்தக் கருத்துக்கணிப்பையும் அதற்கான அழைப்புக் கடிதத்தையும் வீட்டுக்கு எடுத்துச்செல்வார்கள். அந்தக் கருத்துக்கணிப்பை அவர்களது குடும்பத்தினருடன் சேர்ந்து வீட்டிலேயே பூர்த்திசெய்யும்படி அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- EVS க்குச் சமூகமளிக்கும் பாலர்வகுப்பு முதல் தரம் 3 வரையுள்ள மாணவர்களின் குடும்பத்தவர்களுக்கு அந்தக் கருத்துக்கணிப்பை நிர்வகிக்கும் செயல்முறை தொடர்பாக வேறொரு கடிதம் கிடைக்கும்.
- தரம் 4 முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கு அந்தக் கருத்துக்கணிப்பைப் பூர்த்திசெய்வதற்கான நேரம் வகுப்பில் வழங்கப்படும்.
- அந்தக் கருத்துக்கணிப்பில் பங்குகொள்வதில்லை என்பதைத் தெரிவுசெய்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அந்தக் கருத்துக்கணிப்பு கிடைக்கமாட்டாது.

மாணவர்களும் குடும்பத்தினரும் அவர்களின் அனுபவங்களையும் பெறுமதிமிக்க கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பை அந்தக் கருத்துக்கணிப்பு வழங்குகிறது. மாணவர்களின் பரந்துபட்ட தேவைகளைத் தொடர்ந்து பூர்த்திசெய்வதற்கும், கற்றலுக்கான தடைகளைக் கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்கும் சேகரிக்கப்படும் தகவல்கள் சபைக்கு உதவும்.

ஒவ்வொரு மாணவரும் முக்கியமானவர் என்ற கருத்துக்கணிப்பு மற்றும் குடும்பத்தினருடனான கடந்தகாலத் தகவல்தொடர்புகள் பற்றிய தகவல்கள் யாவும் சபையின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

இந்த முக்கியமான முன்னெடுப்புக்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு நன்றி.

உண்மையுள்ள,

Scott Yake
Director of Education (இடைக்காலம்)